தீபாவளி இலவச வெளியீடு.

உ

சிவமயம்

“திருவிளக்கிட்டாரைத் தெய்வம் அறியும்”



# திருவிளக்கு வழிபாடு
# திருமால் வழிபாடு

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளித் தெளிவார்க்கு சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணி விளக்கே

—திருமூலர் திருமந்திரம் 10-ம் திருமுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அன்பு செய்க | — | LOVE |
| தர்மம் செய்க | — | GIVE |
| தொண்டு செய்க | — | SERVE |
| தியானம் செய்க | — | MEDITATE |
| அநுபூதி அடைக | — | REALISE |
| தூய்மை அடைக | — | PURIFY |
| இகழ்வைப் பொறுக்க | — | BEAR INSULT |
| துன்பத்தைச் சகிக்க | — | BEAR INJURY |
| நன்மை செய்க | — | DO GOOD |
| நல்லவராய் வாழ்க | — | BE GOOD |

—ஸ்ரீ சுவாமி சிவானந்தர்.

## திரு அருட்பா

### திரு ஆயிரம்

பரமசிவ வணக்கம்

திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்
சிவஞா னநிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைச் சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்க ஒளி சிறந்த திருவிளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருளுதவு பெருந்தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்து ஒருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்த சிவக் கொழுந்தே.

—இராமலிங்க சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

வேலும் மயிலும் துணை

# தீப லக்ஷ்மி திருவிளக்கு வழிபாடு

ஊன் ஆனாய் உயிர் ஆனாய்
    உயிரில் உறும் உணர்வானாய்
*வான் ஆதி ஐம் பூத
    வகை எல்லாம் நீ ஆனாய்
தேன் ஆரும் மலர்க் கொன்றைச்
    சிவம் என்னும் பொருள் ஆனாய்
நான் ஆனாய் உயிர்க்கு உயிரே
    **ஞானப் பேரொளி யுமையே.

* "வான் ஆதிஐம்பூதம்" என்றது முப்பத்தாறு தத்துவங்களை.
** "ஞானப் பேரொளி" ஞானப்பூங்குழல், ஞானப்பூங்கோதை என்னும் திருநாமங்கள் நமது வழிபடு கடவுளாகிய திருக்காளத்தி அம்மையாருக்கு உரியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவல்

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடற் பிறப்பே
சோதி மணி விளக்கே சீதேவி பொன் மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாக்ஷித் தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்துப் பஞ்சுத்திரிபோட்டுக்
குளம்போலே எண்ணெய் விட்டுக் கோலமுடன் ஏற்றிவைத்தேன்
ஏற்றினேன் நெய் விளக்கு எந்தன் குடிவிளங்க
வைத்தேன் திரு விளக்கு மாளிகையும் தான் விளங்க
மாளிகையில் சோதியுள்ள மாதாவைக்கண்டு மகிழ்ந்தேன் யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாரும் அம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாரும் அம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாரும் அம்மா
பட்டி நிறையப் பால் பசுவைத் தாரும் அம்மா
கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாரும் அம்மா
புகழுடம்பைத் தாரும் அம்மா பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும் பகலும் என்றன் அண்டையிலே நில்லுமம்மா

## நமஸ்காரம்

சேவித் தெழுந்திருந்தேன் தேவி வடிவங்கண்டேன்
வச்சிரக் கிரீடங்கண்டேன் வைடூர்ய மேனிகண்டேன்
குத்துக் கொண்டைகண்டேன் முழுப்பச்சைமாலைகண்டேன்
சவுரிமுடி கண்டேன் தாழை மடல் சூடக்கண்டேன்
பின்னலழகு கண்டேன் பிறைபோல் நெற்றிகண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்துடன் நெற்றிகண்டேன் தாயார் வடிவங்கண்டேன்
கமலத் திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுக் கண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலை யசையக் கண்டேன்
கைவளையல் கலகலென்னக் கணையாழி மின்னக்கண்டேன்
தங்க ஒட்டியாணம் தகதகென ஜொலிக்கக்கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாழி பீலி கண்டேன்
மங்கள நாயகியை மனங்குளிரக் கண்டு மகிழ்தேன் அடியாள் நான்

அன்னையே அருந்துணையே அருகிருந்து காருமம்மா
வந்த வினையகற்றி மகாபாக்கியம் தாரும் அம்மா
தாயாகும் உன்றன் தாளடியில் சரணம் என்றேன்
மாதாவே யுன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.

## நமஸ்காரம்

இந்த அகவலைப்பாடி முடிந்த பின்பு பதினாறு நமஸ்காரம் செய்தல் வேண்டும் அதன்பின் தீப லக்ஷ்மியினிடமிருந்து வேண்டிய வரங்களைத் தரும்படி மேலும் மேலும் விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

ஸர்வ மங்கள மாங்கல்யே
சிவே ஸர்வாத்த ஸாதகே
சரண்யே திரியம்பகே தேவி
நாராயணி நமோஸ்துதே

•••○•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்



# திருவிளக்கு அர்ச்சனை

1. பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி
2. போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
3. முற்றறி வொளியாய் மிளிர்ந்தாய் போற்றி
4. மூவுலகும் நிறைந்திருந்தாய் போற்றி
5. வரம்பி லின்பமாய் வளர்ந்தாய் போற்றி
6. வானமாய் அருண்மழை பொழிந்தாய் போற்றி
7. இயற்கை அறிவொளியானாய் போற்றி
8. ஈரேழுலகம் ஈன்றாய் போற்றி
9. பிறர்வயமாகப் பெரியாய் போற்றி
10. பேரின்பப் பெருக்காய்ப் பொலிந்தாய் போற்றி
11. பொருட்கடலாம் பொருளே போற்றி
12. பெரியோர்க் கெல்லாம் பெரியோய் போற்றி
13. முடிவிலாற்றல் உடையாய் போற்றி
14. மூவுலகுந்தொழ மூத்தோய் போற்றி
15. அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
16. ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# திருவிளக்கு பூஜை வழிபாடு

(அர்ச்சனை)

ஓம் சிவாய நம:
ஓம் சிவசக்தியே நம:
ஓம் இச்சாசக்தியே நம:
ஓம் கிரியா சக்தியே நம:
ஓம் சொர்ண சொரூபியே நம:
ஓம் ஜோதி லெட்சுமியே நம:
ஓம் தீப லெட்சுமியே நம:
ஓம் மகா லெட்சுமியே நம:
ஓம் தன லெட்சுமியே நம:
ஓம் தான்ய லெட்சுமியே நம:
ஓம் தைர்ய லெட்சுமியே நம:
ஓம் வீரலெட்சுமியே நம:
ஓம் விஜய லெட்சுமியே நம:
ஓம் வித்யா லெட்சுமியே நம:
ஓம் ஜெய லெட்சுமியே நம:
ஓம் வர லெட்சுமியே நம:
ஓம் கஜ லெட்சுமியே நம:
ஓம் காமவல்லியே நம:
ஓம் காமாக்ஷி சுந்தரியே நம:
ஓம் சுப லெட்சுமியே நம:
ஓம் இராஜ லெட்சுமியே நம;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கிருக லெட்சுமியே நம:
ஓம் சித்தலெட்சுமியே நம:
ஓம் சீதாலெட்சுமியே நம:
ஓம் திரிபுர லெட்சுமியே நம:
ஓம் சர்வமங்கள காரணியே நம:
ஓம் சர்வ வீக்க நிவாரணியே நம:
ஓம் சர்வாங்க சுந்தரியே நம:
ஓம் சௌபாக்கிய லெட்சுமியே நம:
ஓம் நவக்கிரக தாயினியே நம:
ஓம் அண்டர் நாயகியே நம:
ஓம் அலங்கார நாயகியே நம:
ஓம் ஆனந்த சொரூபியே நம:
ஓம் அகிலாண்ட நாயகியே நம:
ஓம் பிரமாண்ட நாயகியே நம:
ஓம் எனும் சிற்பரத்தாளே நம:

அபாய மறுக்கும் அறுக்கோணத்தி
சொற்பவணத்தி சூக்ஷம ரூபி
சரணம் சரணம் தாள்பணிந்தே னுனை
பாவம் பொறுத்து பலபவு சுந்தான் கொடுத்து
விக்கினங்கள் வராமல் வேலிபோல் காத்து
ஆதரித் தெனக்கு அருள்புரிவாயே
புவன சுந்தரிபோற்றி வணக்கம்
குருவடிவாய் வந்து உபதேசங்கள்
கொடுத்துன் திருவடி தந்தருள்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராம ஜெயம்

# ஆனந்த ராமத்யானம்

## ஆஞ்சனேயர் துதி

கோதண்ட தீக்ஷா குருராம நாமமதைக்
கீதண்டாவா றடியேன் செப்புதற்கு—கோதண்டர்
மாருதியே அஞ்சனையாள் மைந்தனே நற்கருணை
வாருதியே நீ துணையே வா.

## பெருமாள் துதி

அண்டர்தம் துயரம்தீர அயோத்திமா நகரில்வந்து
தண்டகா ரணிகஞ்சென்று சமுத்திர மீதணையைக் கட்டிக்
கொண்டு ராவணனை மாட்டிக் கோதண்டங் கையிலேந்தும்
புண்டரீகக் கண்ணன் ராமன் பொன்னடிக் கமலம்போற்றி.

## 1-வது பாலகாண்டம்

(சோமசேகரனருளும் பாலா வேலா என்ற மெட்டு)

தேவர்சிறை தீர்ந்திடவே ராமா ராமா
மூவரோடவதரித்தாய் ராமா ராமா
தசரதர்க்குப் பாலகனாய் ராமா ராமா
புஜபலத்தோடே ஜனித்தாய் ராமா ராமா
கோசலைத் தன் கர்ப்பத்திலே ராமா ராமா
கூசாமலே பிறந்தாய் ராமா ராமா
தவமுனிக்கு உதவி செய்ய ராமா ராமா
கவனமுடன் பின்சென்றாய் ராமா ராமா
தாடகையை சங்கரித்தாய் ராமா ராமா
பாடபுகழ் தானடைந்தாய் ராமா ராமா
கல்லைப்பெண்ணு ஆக்குவித்தாய் ராமா ராமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வில்வளைக்க மிதுலை சென்றாய் | ராமா ராமா |
| ஜனகன்வர லாறு கேட்க | ராமா ராமா |
| தனக்குப்பதில் முனியுரைக்க | ராமா ராமா |
| தனுசைக் கையி லேயெடுத்தாய் | ராமா ராமா |
| மனசில் ஒரு கிலேசமற்றாய் | ராமா ராமா |
| வில்முறியச் சீதைகண்டு | ராமா ராமா |
| நல்மணமுஞ் செய்துகொண்டாள் | ராமா ராமா |
| மங்களங்கள் பாடவே | ராமா ராமா |
| தங்கினீர் மிதுலைதனில் | ராமா ராமா |
| பரசுராமன்வில்முறித்தீர் | ராமா ராமா |
| கரசனமா வயோத்தி சென்றீர் | ராமா ராமா |
| சீதையுடன் வாழ்ந்திருந்தீர் | ராமா ராமா |
| சிறப்பவே அயோத்தி நகர் | ராமா ராமா |

## 2-வது அயோத்தியா காண்டம்

| | |
|---|---|
| அயோத்திக்கு அரசனாக | ராமா ராமா |
| அவனிதனில் தசரதரும் | ராமா ராமா |
| உந்தனையே வேண்டிக்கொண்டார் | ராமா ராமா |
| சிந்தை களித்திருந்தார் | ராமா ராமா |
| சிற்றன்னைகைகேசியை | ராமா ராமா |
| பற்றில்லாதுகூனியுமே | ராமா ராமா |
| பக்குவமாய்த் தான் கலைத்து | ராமா ராமா |
| பரதர்முடி பெற்றிடவே | ராமா ராமா |
| உத்தரவு கேளென்று | ராமா ராமா |
| ஊக்கமுண்டாக்கி விட்டாள் | ராமா ராமா |
| தாய்மொழி தவராமலே | ராமா ராமா |
| தவவேடம்தான் கொண்டாய் | ராமா ராமா |
| தசரதரும் விசனங்கொள்ள | ராமா ராமா |
| தானடந்தாய்கானகமும் | ராமா ராமா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதையுடன் புறப்படவே ராமா ராமா
இலக்ஷுமணர் கூடவந்தார் ராமா ராமா
பக்தரெல்லாம் புலம்பிடவும் ராமா ராமா
பலநீதிசொல்லி தானகன்ருய் ராமா ராமா
கங்கைக்கரை யடைந்தாய் ராமா ராமா
நங்கை சீதையுடன் ராமா ராமா
ஓடம் விட்ட குகனுடன் ராமா ராமா
உறவுகொண்டு அங்கிருக்க ராமா ராமா
சிறப்புடனே பாதுகைக்கு ராமா ராமா
பட்டங்கட்டி யரசுசெய்ய ராமா ராமா
பரதரும் திரும்பிச் சென்ருர் ராமா ராமா

## 3-வது ஆரணிய காண்டம்

அத்திரு முனியைக்கண்டு ராமா ராமா
அப்புரம் தண்டகம் சேர்ந்தாய் ராமா ராமா
கொடிய விராதகனை ராமா ராமா
மடிய சங்காரம் செய்தாய் ராமா ராமா
தண்டக வனத்துரிஷிகள் ராமா ராமா
அண்டவா காத்து நின்றீர் ராமா ராமா
பஞ்சவடி தீரம் சென்ருய் ராமா ராமா
பர்ணசாலை கட்டிநின்றீர் ராமா ராமா
சூர்ப்பநகையை கண்டீர் ராமா ராமா
தீர்ப்பாய் தம்பியென்றீர் ராமா ராமா
தம்பியால் பங்கமடைந்தாள் ராமா ராமா
வெம்பிமனம் வாடினுள் ராமா ராமா
கரதூஷணதியரை ராமா ராமா
வரமுறையிட்டாள் ராமா ராமா
கோதண்டத்துக் கிரையாக ராமா ராமா
கூக்குரலிட் டோடிவந்தார் ராமா ராமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சூர்ப்பநகை தூண்டுதலால் | ராமா ராமா |
| ஆர்பரித்தான் ராவணனும் | ராமா ராமா |
| மாரீசனை மானகவர | ராமா ராமா |
| மருமகனும் வேண்டிக்கொண்டான் | ராமா ராமா |
| மாரீசன் மறுத்ததற்கு | ராமா ராமா |
| தாறுமாறாய்க் கூறிவிட்டான் | ராமா ராமா |
| சீதை முன்னே மான்வரவே | ராமா ராமா |
| அதைப்பிடிக்க பின்சென்றார் | ராமா ராமா |
| அம்புபட்டு விழுந்ததுமான் | ராமா ராமா |
| நம்பும்படி கூக்குரலிட | ராமா ராமா |
| சிந்தை கலங்கிடவே | ராமா ராமா |
| சீதை வருந்தினளே | ராமா ராமா |
| ராவண சந்யாசிவந்தான் | ராமா ராமா |
| நிலத்தோட சீதையை | ராமா ராமா |
| தேரின்மே லெடுத்துச்சென்றான் | ராமா ராமா |
| தெரிந்தெதிர்க்க சடாயுவும் | ராமா ராமா |
| சிறகொடிந்து நிலத்தில் விழ | ராமா ராமா |
| சீதைவரம் தந்து சென்றாள் | ராமா ராமா |
| தேடிவரும் வழியில் | ராமா ராமா |
| தென்பட்ட சடாயுவுக்கு | ராமா ராமா |
| நல்வரமுந் தானளிந்தாய் | ராமா ராமா |
| செல்வழியில் கவந்தன் வர | ராமா ராமா |
| சேரமெம லோகந் தந்தீர் | ராமா ராமா |
| சபரிக்கு முத்தி தந்தீர் | ராமா ராமா |

## 4-வது கிஸ்கிந்தா காண்டம்

| | |
|---|---|
| அனுமான் எதிரில் வர | ராமா ராமா |
| அவரால் சுக்ரீவனை | ராமா ராமா |
| நேசங்கொண்டு யோசனைகள் | ராமா ராமா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீணிலத்தில் செய்து கொண்டீர் ராமா ராமா
சீதையின் நகைகளை ராமா ராமா
கண்டுமணங் கசிந்தீர் ராமா ராமா
சுக்ரீவன் தேற்றிடவே ராமா ராமா
துளைத்துவிட்டீர் மாமரத்தை ராமா ராமா
வாலியை வதைத்தவனே ராமா ராமா
வைகுந்தம் போகச் செய்தீர் ராமா ராமா
சீதையைத் தேடும்படி ராமா ராமா
சேதி சொல்லிவிடுத்தீர் ராமா ராமா
நான்கு திசைகளிலும் ராமா ராமா
நலமுடன் தேடலுற்றுர் ராமா ராமா
காடுமலை வன மெல்லாம் ராமா ராமா
கண்கூடாய்த் தேடுகிருர் ராமா ராமா

## 5-வது சுந்தர காண்டம்

சீதை யிருப்பிடத்தை ராமா ராமா
சம்பாதி யுரைத்திடவே ராமா ராமா
மயேந்திரம் யேறியே ராமா ராமா
பாய்ந்தானே அனுமானும் ராமா ராமா
இலங்கணி தன்னையே ராமா ராமா
கலங்கிட வடித்தானே ராமா ராமா
சீதையைத் தேடிக்கண்டானே ராமா ராமா
சேதியடையாளந்தந்தான் ராமா ராமா
அசோகவன மழித்தான் ராமா ராமா
அசுரர்களைத் தான் வதைத்தான் ராமா ராமா
இலங்கைக்குக் கொள்ளிவைத்து ராமா ராமா
கலங்கடித்தான் ராவணனை ராமா ராமா
சீதைதந்த சூடாமணி ராமா ராமா
அனுமானும் வாங்கி வந்தான் ராமா ராமா
இந்திர சித்தன் அஸ்திரத்தால் ராமா ராமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்திக்க அனுமானும் ராமா ராமா
ராவணனைக் கண்டனுமான் ராமா ராமா
சாவாமைக்குப் புத்திசொன்னான் ராமா ராமா
விதியை வெல்வாரில்லை ராமா ராமா
மதுவனம் அழித்தவர்கள் ராமா ராமா

## 6-வது யுத்த காண்டம்

சேதுவை அணைகட்ட ராமா ராமா
சேனையுடன் போய்ச் சேர்ந்தீர் ராமா ராமா
சரணமடைந்த விபீஷணர்க்கு ராமா ராமா
சிரஞ்சீவி பட்டந்தந்தாய் ராமா ராமா
ராவணாதி யசுரரைக் கொன்றாய் ராமா ராமா
ராஷதர்தோற்றுப்போக ராமா ராமா
சீதையை சிறை நீக்கிவிட்டாய் ராமா ராமா
விபீஷணனுக்கு முடி தரித்தாய் ராமா ராமா
அயோத்திக்கு திரும்பிவர ராமா ராமா
சேதுவிற்த குறைசெய்தாய் ராமா ராமா
புஷ்பக விமானமதில் ராமா ராமா
புண்ணிய முனிவரிடம் ராமா ரமாா
போஜனமருந்த சென்றீர் ராமா ராமா
போகவிடுத் தனுமானை ராமா ராமா
பரதனுயிர் காப்பாற்றிய ராமா ராமா
அயோத்திநகர் வந்து சேர்ந்த ராமா ராமா
மகுடாபிஷேகம் கொண்ட ராமா ராமா
மகிழ்ச்சியுற வாழ்ந்திட்ட ராமா ராமா
குவலயத்தை ரக்ஷிக்கும் ராமா ராமா
குறைகளொன்றும் வராது ராமா ராமா

## ஆனந்த ராமத்யானம் சம்பூர்ணம்

ஸ்ரீராம ஜெயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீதுளஸி ஸ்தோத்திரம்

ஸ்ரீமத் துளசியம்மா திருவே கல்யாணியம்மா
வெள்ளிக்கிழமை தன்னில் விளங்குகின்ற மாதாவே
செவ்வாய்க்கிழமை செழிக்க வந்த செந்திருவே
தாயாரே யுந்தன் தாளிணையில் நான்பணிந்தேன்

பச்சைப் பசுமையுள்ள துளஸி நமஸ்தே
பரிமளிக்கும் மூலக் கொழுந்தே நமஸ்தே
அற்பப் பிறப்பைத் தவிர்ப்பாய் நமஸ்தே
அஷ்ட ஐஸ்வர்யம் அளிப்பாய் நமஸ்தே

ஹரியுடைய தேவி அழகி நமஸ்தே
அடைந்தார்க்கு இன்பம் அளிப்பாய் நமஸ்தே
வனமாலை யென்னும் மருவே நமஸ்தே
வைகுண்ட வாஸியுடன் மகிழ்வாய் நமஸ்தே

அன்புடனே நல்ல அருந்துளசி கொண்டுவந்து
மண்ணின் மேல்நட்டு மகிழ்ந்து நல்ல நீருற்றி
முற்றத்தில் தான் வளர்த்து முத்துபோல் கோலமிட்டு
செங்காவி சுற்றுமிட்டு திருவிளக்கு மேற்றி வைத்து

பழங்களுடன் தேங்காயும் தாம்பூலம் தட்டில் வைத்து
புஷ்பங்களைச் சொரிந்து பூஜித்த பேர்களுக்கு
என்ன பலனென்று ஹ்ருஷீகேசர் தான் கேட்க
மங்களமான துளசி மகிழ்ந்துரைப்பாள்

மங்களமாய் என்னை வைத்து மகிழ்ந்து உபாஸித்தவர்கள்
தீவினையைப் போக்கிச் சிறந்த பலம் நானளிப்பேன்
அரும்பிணியை நீக்கி அஷ்டஐச்வரியம் நானளிப்பேன்
தரித்திரத்தை நீக்கி செல்வத்தை நான் கொடுப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரனில்லா தவர்க்கு புத்திர பாக்கியமளிப்பேன்
கன்னிகைகள் பூஜைசெய்தால் நல்லகணவரை கூட்டுவிப்பேன்
கிரகஸ்தர்கள் பூஜைசெய்தால் கீர்த்தியுடன் வாழவைப்பேன்
முமுக்ஷுக்கள் பூஜைசெய்தால் மோக்ஷபதம் கொடுப்பேன்

கோடிகாராம் பசுவை கன்றுடனே கொண்டுவந்து
கொம்புக்குப் பொன்னமைத்து குளம்புக்கு வெள்ளிகட்டி
கங்கைக் கரைதனிலே கிரஹண புண்யகாலத்தில்
வாலுருவி அந்தணர்க்கு மகாதானஞ் செய்தபலன்

நானளிப்பேன் சத்தியமென்று நாயகியுஞ் சொல்லலுமே
அப்படியே யாகவென்று திருமால் அறிக்கையிட்டார்
இப்படியே அன்புடனே ஏற்றித் தொழுதவர்கள்
அற்புதமாய் வாள்ந்திடுவார் பரதேவி தன்னருளால்

---

## ஸ்ரீதுளசி மகிமை

நமது தேவியே பூவுலகில் தங்கி தம் மக்களின் உடல் பிணி, உள்ளப்பிணி ஆகிய இருவகைப் பிணிகளையும் போக்கிப் பேரின்ப வாழ்வளிக்க எடுத்த வடிவமே ஸ்ரீ துளசி சாமான்ய நோக்குடன் காண்பவர்களுக்குச் செடியின் உருவமாகவும் உடற்பிணிகளைப் போக்கும் ஒரு மருந்துச் செடியாகவும் இருந்துகொண்டு தெய்வீகமான நோக்குடன் காணும்போது உலகை விளங்கவைக்கும் மகாலக்ஷ்மியின் ஸ்வரூபமாகக் காட்சியளிக்கிறாள் ஸ்ரீ துளசி தேவி.

துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி, சாவித்திரி, ராதாதேவி என்னும் ஐந்து பிரதான சக்திகளின் அம்சமாகவே கிராம தேவதை உள்பட எல்லாச் சக்திகளும் உண்டாயினர். ஸ்ரீ லக்ஷ்மிதேவியே தர்மவஜன்—மாதவி என்ற தம்பதிகளுக்குப் புத்திரியாகப் பிறந்து பிரம்மாவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துத் தவஞ்செய்து அவரால் வரம் பெற்றாள். இந்தத் துளசிச் செடியாய் மாறி ஸ்ரீ விஷ்ணுவுக்கு பிரிய மான புஷ்பமாக விளங்குகிறாள். துளசி இல்லாத பூஜையை மஹாவிஷ்ணு ஏற்றுக்கொள்ள மாட்டார். 'திருத்துழாய்' என்னும் பெயரில் விஷ்ணு ஆல யங்களில் சிறந்த பூஜா சாதனமாக விளங்குவது இத்துள சியே. துளசி உள்ள இடத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு எப் பொழுதும் பிரசன்னராக விளங்குகிறார். துளசியினால் பூஜித்தால் 1000 பாற்குடங்களால் அபிஷேகஞ் செய்த திருப்தியை ஸ்ரீ மஹாவிஷ்ணு அடைகிறார். அந்திக் காலத்தில் துளசி தீர்த்தம் சாப்பிட்டால் பிறவி நீங்கி விஷ்ணுலோகத்தை அடைவார்கள். எடுத்துவைத்த துளசி மூன்று நாளைக்குப் பூஜைசெய்ய உபயோகிக்கப் படும். மகாவிஷ்ணுவை மட்டுமல்லாமல் ஸ்ரீ மஹா தேவனையும் கூட துளசியினால் அர்ச்சனை செய்யலாம்.

இவ்வாறு மகிமைவாய்ந்த ஸ்ரீ துளசியை நம் வீடு களில் அழகிய மாடங்களில் வளர்த்து, பக்தியுடன் பூஜித்தால் இம்மை மறுமை இரண்டையும் ஒருங்கே பெறலாம். கன்னிப் பெண்கள் பூஜித்தால் நல்ல மணு ளனைப் பெறுவர். சுமங்கலிகள் பூஜித்தால் தீர்க்க சௌ மங்கல்யத்தையும் சகல சௌபாக்கியங்களையும் பெறு வர். எனவே அனைவரும் ஸ்ரீ துளசியைப் பூஜித்துப் பேறு பெறுவார்களாக.

"ப்ருந்தா, ப்ருந்தாவனீ, விச்வ பூஜிதா, விச்வ பாவனீ!
புஷ்பஸாரா, நந்தனீச, துளஸீ, க்ருஷ்ணஜீவனீ!!
ஏதந்நாமாஷ்டகம் சைவஸ்தோத்ரம் நாமார்த்த ஸம்யுதம்!
ய: படேத் தாம்ச ஸம்பூஜ்ய ஸோச்வமேத பலம் லபேத்!!

ஸ்ரீ

ஸ்ரீமதே இராமாநுசாய நம:



# திருமால் வழிபாடு

இறைவன் ஒருரும் ஒருமரபும் இல்லான்; அவனுக்கு ஆயிரம் திருப்பெயர் சூட்டி வழிபட்டனர் ஆன்றோர். அவனுக்குக் குறிகளும் குணங்களும் கொண்டனர்; அக்குறிகளுள் ஒன்றே திநமால் திருவுரு. அவன் உலகுயிர்களையெல்லாம் தன் வயிற்றுட்கொண்டு பாதுகாத்தருள்கின்றான் என்று விசிட்டாத்துவிதமறை முழங்கும்.

இத்தகைய திருமாற் பெருமானைப் பலவகை மலர் கொண்டு வழிபட்டு வாழ்த்துதல் தொன்றுதொட்ட மரபு. அதனுடன் நம் தாய்மொழியால் வாழ்த்திக் குறையிரந்து வேண்டி அருள் வேட்டல் அன்பர்கட்கு ஏற்றதாகும்.

## நூற்றெட்டுப் போற்றி

(நிலைமண்டில ஆசிரியப்பா)

அறிவினுக் கறிவாம் அரியே போற்றி
செறிதுழாய்க் கண்ணித் திருமால் போற்றி
மாதிரு மகள்சார் மார்பா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி
உயிரை உடலாய் உற்றாய் போற்றி
உயிர்க்குள் உயிராய் உறைவாய் போற்றி
மஞ்சின் வண்ண மாலே போற்றி
அஞ்சலென் றடியார்க் கருள்வாய் போற்றி
உலகினை உட்செறி வயிற்றோய் போற்றி
நலமுடன் உலகினை நல்கினாய் போற்றி
ஊனமில் சக்கரம் உடையாய் போற்றி
பானிரச் சங்கார் பண்ணவ போற்றி
எழுவில் தண்டினை ஏந்தினாய் போற்றி
வழுவிலா வாள்கொள் மாதவ போற்றி
ஏழுல குந்தொழும் எந்தாய் போற்றி
ஆழ்கடல் அறிதுயில் அமர்ந்தாய் போற்றி
ஐயரா அணையுடை அமலா போற்றி
மையலை எமக்கு மாற்றுக போற்றி
அகமொழித் தவரை ஆள்வாய் போற்றி
இகபரம் இரண்டும் ஈவோய் போற்றி
பொய்யருக் கரிய பொருளே போற்றி
மெய்யருக் கெளிய மேலோய் போற்றி
ஒப்பில் தாமரை உந்தியோய் போற்றி
இப்புவி தோன்ற எண்ணினாய் போற்றி
கரியின் துயரைக் கழித்தாய் போற்றி
பெரிய முதலையைப் பிளந்தோய் போற்றி
ஆயர் மகளிர்க் கன்பா போற்றி
மாயம் புரியும் மாயவ போற்றி
அன்பரின் வெண்ணெய்க் காவலாய் போற்றி
பன்கவு ரவர்க்குப் பகைவா போற்றி
சரணம் அடைந்தோர் சார்வே போற்றி
அரணம் அவர்க்கிங் காவாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் உரைசெவ் சேர்ப்பாய் போற்றி
அருளவள் அன்பர்க் களிப்பாய் போற்றி
நீரினில் மீனாய் நீந்தினாய் போற்றி
பாரினில் ஆமையாய்ப் படிந்தாய் போற்றி
குறளாய் நிலத்தைக் கொண்டாய் போற்றி
திறமுடன் வளர்ந்த செம்மால போற்றி
ஈரடி ஈருல கிட்டனை போற்றி
ஓரடி மாபலிக் குதவினை போற்றி
பன்றியாய்ப் பூமி பரித்தாய் போற்றி
கன்னர சிங்கக் காளாய் போற்றி
வில்லுடை இராமா வீரா போற்றி
வல்லன் பரசு ராமா போற்றி
முழுப்பல ராமன் மாண்பது போற்றி
தொழுமெங் கண்ணன் தூயவன் போற்றி
அவனியிற் கற்கி ஆவாய் போற்றி
இவண்நீ பல்பிறப் பெடுத்தாய் போற்றி
அரிவைக் காடை அளித்தாய் போற்றி
கரியை வேள்வியில் காய்ந்தாய் போற்றி
கஞ்சனைக் காலால் கடிந்தோய் போற்றி
வஞ்சப் பூதகி வதைத்தாய் போற்றி
ஐவர் அன்பில் ஆழ்ந்தாய் போற்றி
அவரென் உயிரென் றறைந்தோய் போற்றி
ஆண்டாள் மாலையை அணிந்தாய் போற்றி
பாண்டவர் நட்பைப் பற்றினாய் போற்றி
அழகுறு பார்த்தன் அடுத்தோய் போற்றி
கழறிக் கீதையைக் காத்தாய் போற்றி
மலையால் மழையை மறித்தோய் போற்றி
கலைகள் பலவும் கற்றோய் போற்றி
சிலையைப் பெண்ணாய்ச் செய்தோய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைசெய் தாடகை கொன்றேய் போற்றி
அரக்கர் பலரை அழித்தோய் போற்றி
குரக்குப் படையினைக் கொண்டோய் போற்றி
கடலை அடைத்த கடவுள் போற்றி
உடலைச் சபரிக் கொழித்தாய் போற்றி
துதிப்போர் வினைத்தொடர் தொலைப்போய் போற்றி
கதியென் றடைவோர் களைகண் போற்றி
நினைவை அறியும் நின்மல போற்றி
அனைத்தும் காணும் அறிவா போற்றி
கற்றேர் பரவும் காரண போற்றி
நற்றவர் நோக்கும் நாரண போற்றி
அடியவர்க் கடியன் ஆனாய் போற்றி
செடியன தீவினை தீர்ப்பாய் போற்றி
கேடொன் றில்லாக் கேசவ போற்றி
மாடுறு நாரண மாதவ போற்றி
மதுசூ தனனே மாயா போற்றி
பதும நாபனே பாவன போற்றி
வாசு தேவனே வாமன போற்றி
திரிவிக் கிரம தேவா போற்றி
அரிகோ விந்தா அச்சுதா போற்றி
தாமோ தரனே சதுரா போற்றி
ஆமா றடியரை ஆள்வோய் போற்றி
இருடி கேசா இறைவா போற்றி
இருள்தீர் ஞான ஈசா போற்றி
தண்ணருட் சீரி தரனே போற்றி
எண்ணம் புகுந்தே இனிப்போய் போற்றி
எங்கும் இலகும் விண்டுவே போற்றி
பொங்கும் கீர்த்தி பூரண போற்றி
சிந்தனை செய்பவர் செல்வா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தம அறுக்கும் பரமா போற்றி
முந்தை வினையை முடிப்போய் போற்றி
அந்தமில் இன்பம் அருள்வோய் போற்றி
செந்தமிழ் மூன்றாய்த் திகழ்வோய் போற்றி
நந்தமிழ்ப் பரப்பின் நடப்போய் போற்றி
செம்மை சேர்திரு வரங்கா போற்றி
மைபடி வேங்கட மலையோய் போற்றி
கச்சியம் பதிவாழ் கன்னலே போற்றி
அர்ச்சையா எங்கும் அமைந்தாய் போற்று
திருவலிக் கேணியில் திகழ்வோய் போற்றி
துருவனுக் கருளைச் சொரிந்தாய் போற்றி
தூயுடல் கொண்டு தோன்றினேய் போற்றி
தோயும் கன்மம் துன்னுய் போற்றி
தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி
பெண்ஆண் உருவாய்ப் பிறங்குவோய் போற்றி
நல்லன உலகிடை நல்குக போற்றி
தாமரைத் திருவடி தந்தருள் போற்றி
மாமகள் கொழுநநின் மலர்த்தாள் போற்றியே.

ஸ்ரீமதே நாராயணாய நம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்ப்பாக்கள்

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பல்கோடி நூறுயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண் ணாஉன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு.

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்அப் பாஞ்சசன் னியமும் பல்லாண்டே

நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன்
நாரா ணாஎன்னும் இத்தனை அல்லால்
புன்மை யால்உன்னைப் புள்ளுவம் பேசிப்
புகழ்வான் அன்றுகண் டாய்திரு மாலே
உன்னு மாறுஉன்னை ஒன்றும் அறியேன்
ஓவா தேநமோ நாரணா என்பன்
வன்மை யாவதுஉன் கோயிலில் வாழும்
வைட்ட ணவன் என்னும் வன்மைகண் டாயே

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்
அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்
செங்கண் கருமுகிலே தாலேலோ
தேவகி சிங்கமே தாலேலோ
—பெரியாழ்வார் திருமொழி.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

—நாச்சியார் திருமொழி.

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள் குழாங்குழுமித்
திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக்களிப்போ டழுத கண்ணீர் மழைசோர
நினைந்துருகி ஏத்தி நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும் திருவரங்கத்து
அரவணையில் பள்ளி கொள்ளும்
போராழி அம்மானைக் கண்டு துள்ளிப் பூதலத்தில்
என்றுகொலோ புரளும் நாளே

ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே

செடியாய வல்வினைகள் தீர்க்குந் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே

—பெருமாள் திருமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனில்மேய ஆவிநீ உறக்கமோ டுணர்ச்சிநீ
ஆனில்மேய ஐந்தும்நீ அவற்றுள்நின்ற தூய்மைநீ
வானிடோடும் மண்ணும்நீ வளங்கடற் பயனும்நீ
யானும்நீய தன்றியெம் பிரானும்நீ இராமனே

அத்தனாகி அன்னையாகி ஆளும்எம்பி ரானுமாய்
ஒத்தொவ்வாத பல்பிறப் பொழித்துநம்மை ஆட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்துநம்முள் மேவினார்
எத்தினால் இடர்க்கடல் கிடத்தியேழை நெஞ்சமே

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும் - வேங்கடமே
தானவரை வீழத்தன் ஆழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை

—திருமழிசை யாழ்வார்.

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலர் எல்லாம்
வானவர் அரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மாபள்ளி எழுந்தரு ளாயே

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண் ணெய்
உண்ட வாயன்என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே

—திருப்பாணாழ்வார்.

திரிதந் தாகிலும் தேவர் பிரானுடை
கரிய கோலத் திருவுருக் காண்பன்நான்
பெரிய வண்குரு கூர்நகர் நம்பிக்காள்
உரிய னாயடி யேன் பெற்ற நன்மையே

நம்பி னேன்பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பி னேன்மட வாரையும் முன்னெலாம்
செம்பொன் மாடத் திருக்குரு கூர்நம்பிக்கு
அன்ப னாயடி யேன்சதிர்த் தேனின்றே

—மதுரகவி ஆழ்வார்.

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்நால் பெருந்துயர்
இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோ டவர்தரும்
கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால் உணர்வெனும்
பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன் நாரா
யணாவென்னும் நாமம்

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர்
ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும் அருளொடு
பெருநிலம் அளிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும்
ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராய
ணாவென்னும் நாமம்

பாருருவில் நீரெரிகால் விசும்பும் ஆகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர்தம் திருவுருவே றெண்ணும் போது
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கட லுருவம் ஒத்து நின்ற
மூவரும் கண்டபோ தொன்றும் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவம் தானே.

—திருமங்கை ஆழ்வார்.

வையம் தகளியா வார்கடலை நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன்சொல் மாலை
இடராழி நீங்குகவே என்று.

குன் றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக என்னெஞ்சே—என்றும்
புறனுரையே ஆயினும் பொன்னாழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு

ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனைநான்
இன்று மறப்பனோ ஏழைகாள்—அன்று
கருவரங்கத் துள்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை

—பொய்கை யாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்

யானே தவஞ்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்—யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது

—பூதத்தாழ்வார்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று

நாமம் பலசொல்லி நாராய ணாவென்று
நாமங்கை யால்தொழுதும் நல்நெஞ்சே—வாமருவி
மண்ணுலகம் உண்டுமிழ்ந்த வண்டறையும் தண்துளாய்க்
கண்ணனையே காண்கநம் கண்

—பேயாழ்வார்.

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிரளிப்பான்
எந்நின்ற யோனியும் ஆய்ப்பிறந் தாயிமை யோர்தலைவா
மெய்ந்நின்று கேட்டரு ளாயடி யேன்செய்யும் விண்ணப்பமே

உயர்வர உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே

—நம்மாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவரங் காவுறை மார்பா திசைமுகன் சேவிப்பக்கந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்
திருவரங் காவுன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு செய்வதற்கே
—திருவரங்கத் தந்தாதி.

புண்ணுர் உடற்பிறவி போதுமெனக் கும்முனக்கும்
எண்ணு திருந்த தினிப்போதும்—கண்ணு
குழற்காளாய் தென்னரங்கக் கோயிலாய் நின்பொன்
கழற்காளாய் நின்றேனைக் கா
—திருவரங்கக் கலம்பகம்.

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால் அவரென்ப கைவில் ஏந்தி
இலங்கையிற் பொருதார் அன்றே மறைகளுக் கிறுதி ஆவார்
—கம்பராமாயணம்.

சீர்பூத்த பரஞ்சுடராய்த் சித்தாகிக் கானலிடை
நீர்பூத்த தெனஉலகம் நிறைந்தொளிதன் பால்தோன்ற
ஏர்பூத்த முத்தொழிலும் இனிதியற்றித் தனிநின்ற
கார்பூத்த திருமேனிக் கடவுள்மலர் அடிபணிவாம்

வானே வளியே வயங்கெரியே வனமே
மண்ணே இவ்வைந்தின்
ஊனே உயிரே உயிர்க்குயிரே உன்னும்
உறுவர் உளத்தூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனே நங்கள் பெருவாழ்வே சிவனே
    அயனே இருவருக்கும்
கோனே நின்னைக் குணமில்லேன் குறித்தென்
    சொல்லிப் பழிச்சுகோ

—பாகவத புராணம்.

வேதமும் வேதம் விளம்புமெய்ப் பொருளும்
    அப்பொருள் விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனும்
    அப்பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும் உலகம் படைத்தளித் தழித்து
    ஞானமாய் அகிலமும் நிறைவுற்று
ஆதியும் நடுவும் முடிவுமாய் நின்ற
    ஆதியான் அடியிணை பணிவாம்

சங்கையி லாவகை யமபட ராலுயிர் தளர்பொழு தத்தருகே
மங்கையர் சூழஇ ருந்தழு துள்ளம யக்கினும் யான்மறவேன்
கங்கையும் நான்மறை யுந்துள வுங்கமழ் கழலிணை யுந்திருமால்
அங்கையின் மீதொளிர் சங்கமும் நேமியும் அஞ்சன மேனியுமே

—வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

எரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையும் மேனியை மேனித்
திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை மார்பில்
தெரிமணி பிறங்கும் பூணினை மால்வரை
எரிதிரிந் தன்ன பொன்புனை உடுக்கையை
சேவலங் கொடியோய்நின் வலவயின் நிறுத்து
மேவலுட் பணிந்தமை கூறும்
நாவல் அந்தணர் அருமறைப் பொருளே

—பரிபாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை அசோதையர் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே

இரண்டமரர் தொழுதேத்தத் திருமால்நின் செங்கமல
இரண்டியான் மூவுலகும் இருள்தீர நடந்தனையே
நடந்தஅடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தஅடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே

—சிலப்பதிகாரம்: ஆய்ச்சியர்குரவை.

மாநிலம் சேவடி ஆகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை ஆக
விசும்புமெய் ஆகத் திசைகை ஆகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக
இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே

—நற்றிணை.

ஒருவயிற்றிற் பிறவாது பிறந்தருளி உலகொடுக்கும்
திருவயிற்றிற் றெருகுழவி திருநாமம் பரவுதுமே

—கலிங்கத்துப்பரணி.

கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம்—நண்ணிய
மாயச்சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி.

—திரிகடுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியை மடியகத் திட்டான் அடியினேன்
முக்காற் கடந்தான் முழுநிலம்— அக்காலத்து
ஆப்பனித் தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை அழித்த மகன்.

—நான்மணிக்கடிகை.

கல்லால் கடலடைத்த கண்ணன்பேர் கல்லாநாள்
இல்லா தவர்க்கினிமேல் இல்லையே—நல்லார்கள்
சூழ்ந்தே துதிஅமுதில் தோய்வதல்லால் தீநரகில்
வீழ்ந்தே பதைக்கும் விதி

வானுற நிமிர்ந்தனை வையகம் அளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயிர் ஓம்பினை
நீநிற வண்ணனின் நிரைகழல் தொழுதனம்

—யாப்பருங்கலக்காரிகை மேற்கோள்.

முற்று இளமென் தளிர்க்கரத்தால் முனிவி லாது மெல்லெனச்செய்
பொற்று மறையில் குடியிருக்கும் பூவை வருடும் தொறுஞ் சேக்கும்
விற்று ரணிநல் பதமிரண்டும் வியன்மா நிலந்திண் டிடநடந்து
கற்று மேய்த்த சிற்றுயன் காமர் சீர்த்தி வாழியவே

—குசேல உபாக்கியானம்.

ஆதித் தனிக்கோலம் ஆனேன் அடியவற்காச்
சோதித் திருத்தூணில் தோன்றினன்—வேதத்தின்
முன்னின்றான் வேழம் முதலே என அழைப்ப
என்என்றான் எங்கட் கிறை

—நளவெண்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்மா மணிநிறத் தூயவ னேதொடர் இன்பதுன்புக்கு
இடமாம் சனனம் ஒழிதெனை ஆள் இக லேவிளைத்த
தடமார் கராவிற் பயந்துள்ளம் நைந்துனைத் தஞ்சமென்ற
கடமா அளித்த திருவல்லிக் கேணிக் கருமுகிலே.

—திருவல்லிக்கேணி அந்தாதி.

திருமால் திருவடிகளே சரணம்.

---



சரஸ்வதி துதி

பிரமசித் தாந்த ரூபி பெய்கழல் போற்றி போற்றி
வருநினை வாற்றல் போற்றி வளர்ஞான சத்தி போற்றி
தெருள் புத்தி சத்தி போற்றி திகழ்பிர திபையே போற்றி
விரிவுறு கற்ப னைநற் சத்தியாம் விமலை போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி கவசத்தின் விளக்கம்

1. அம்மைமுன் பக்கம் காக்க
அசலமா மகள் பின்காக்க
வெம்மைசார் நெறிவா ராகி
விரும்பியே காக்க கோட்டை
தம்பிலே துர்க்கை காக்க
சமரினில் காளி காக்க
சும்மைசால் மண்டபத்தில்
மாதங்கி துணைந்து காக்க

2. சுயம்வர மதனில் தேவி
சௌமிய காக்க சூழும்
வயமுடை அரசர் நாப்பண்
மன்னிய பிறவி என்னும்
துயர்தவிர் பவானி காக்க
துன்னுநாற் சந்திக் கண்ணே
மயர்விலாச் சாமுண் டீச்சு
வரிநின்று காக்க காக்க

3. கானகத் தினில்தொல் லோளாம்
காமகா என்னும் தேவி
ஈனம்அற் றிடவே காக்க
விவாதங்கள் எழுந்த காலை
ஆனவை ணவிதான் காக்க
அடர்தரு பகைஞர் மோதின்
மானமற் றடியில் வீழ
வயிரவி காக்க காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இருபுறங் களிலும் தேவி
பார்வதி காக்க எங்கும்
தருசிவை யாய்சிற் சக்தி
தாங்குக ஞாலம் காப்பாள்
வெருவரு விசுவ ரூபி
மெய்யறிவு இன்ப மாகிப்
பொருவிலாது அருள்செய் அன்னை
புவனேசை என்றும் காக்க.

---

## சப்த மாதாக்கள்

1. அபிராமி: தோலிற்குத் தலைவி; இவளது சினம் மிகுந்தால் சொறிநோய் உண்டாகும். வெட்டி வேர் விசிறியினால் விசிறி, விபூதி அணிந்து, பிட்டும் சர்க்கரைப் பானகமும் நிவேதனம் செய்து, ஏழைகட்கு விநியோகித்தால் அன்னை சாந்தம் அடைவாள்.

2. மகேசுவரி: நிணத்திற்குத் தலைவி; இவள் சினமுற்றால் வெட்டுக்காயம் ஏற்படும். குறுவேர் விசிறியினால் விசிறிக் குங்குமார்ச்சனை செய்து, சுண்டலும் நீர்மோரும் ஏழைகட்கு அளித்தால் நலம் பெறலாம்.

3. கௌமாரி: இரத்தத்திற்குத் தலைவி; கோபம் அடைந்தால், பசுக்களுக்குக் கோமாரி என்ற நோய் ஏற்படும். பனையோலை விசிறியினால் விசிறி, எலுமிச்சம்பழ ரஸமும், எலுமிச்சம்பழச் சாதமும், படைத்தால் குணம் அடையும்.

4. நாராயணி: சீழிற்குத் தேவதை; சிற்றமுற்றால் விஷக்கடி ஏற்படும்; சீழ் பெருகும் தென்னை ஓலையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசிறி, பட்டினி இருந்து, பன்னீர் தெளித்துப் பாயசம் நிவேதனம் செய்து பாலர்களுக்கு அளிப்பின் பாங்காகும்.

5. வாராகி: எலும்பின் தேவதை; சினமுறின் வாதபித்தாதிக்கியம் ஏற்படும். மயில் தோகை விசிறியால் விசிறி, பிரார்த்தனை செய்து, வெள்ளரிக்காயும், முறுக்கும் நிவேதனம் செய்து எல்லோருக்கும் விநியோகித்தால் குணம் பெறுவது உறுதி.

6. ருத்திராணி: சதையின் தேவதை; சினங் கொண்டால் அம்மை பெருகும். அன்னையின் சந்நிதியில் தங்கிச் சாமரம் வீசிச் சந்தனம் பூசிப் பலாச்சுளை படைத்தால் அன்னை இரங்குவாள் என்று பெரியோர் நம்புகின்றனர்.

7. காளி: நரம்பின் தலைவி; சீற்றம் கொண்டால் கிராமக் கலகம் உண்டாகும். காளியின் கதையைக் கேட்டும், கவரிமான் விசிறியால் அன்னைக்கு விசிறியும், தயிர் அபிஷேகம் செய்தும், அவல் சேமியாவால் ஆகிய தின்பண்டத்தை நிவேதனம் செய்து ஏழைகளுக்கு அளித்தும், துதித்தால் அன்னை மனம் குளிர்வாள்.

•••○O○•••

நன்மை பெருக அருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

—திருப்புராணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கிடுதல்

திருக்கோயில்களில் திருவிளக்கிடுதல், கிருக லக்ஷ்மி யில் (அதாவது வீட்டில்) தீப லக்ஷ்மி தினமும் காலை, மாலை ஏற்றி வழிபடுதல் சரியைத் தொழில்களுள் மிக விசேட முடையன.

நாம் குடியிருக்கும் வீடுகளைத் தினமும் காலை, மாலை சுத்தப்படுத்தி அழகு படுத்தி, திரு விளக்கேற்றுவதால் வீட்டில் இலக்குமி வாசஞ் செய்கிறாள். இதனால் வீடு புனிதமடைகிறது. வீட்டில் இருளகன்று ஒளி வீசுகிறது. எமது மனதிலும் அஞ்ஞான இருளகன்று மெஞ்ஞான ஒளி வீச ஆரம்பிக்கிறது. இல்லத்தில் அமைதியான, இன்ப மான சூழ்நிலையும் நிலவுகிறது. சகலவித சாபங்களும் பாபங்களும் நீங்கிச் சீரும் திருவும் பொலியும் வாழ்வு மலர்கிறது.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற ஔவை மூதாட்டியின் அமுத வாக்கின்படி எமது இடர் கெடுத்து மங்களவாழ்வு அருளும்படி ஆலயத்திற்கும் சென்று பேரொளி வடிவினனாகிய பெருமானை வணங்கு வதும், அங்கு தீப பூசைகள் கண் குளிரக் காண்பதும் நன்மைகள் பயக்கும்.

இறைவன் எமது பிரார்த்தனைகளை இரங்கி ஏற்றுத் தன்னைத் தினமும் நினைக்கக் கூடிய ஒரு பெருஞ் செல்வத் தையும், தர்ம சிந்தனைகளையும், வளமான வாழ்வையும் உவந்தளிக்கிறான். தீபம் ஏற்றுதல், தீபம் தாங்குதல், தீபத்துக்கு நெய் உதவுதல், திருமுறை ஓதுதல் முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டுகளைச் செய்தால் கொடிய பாவினை நீங்கி இகபர சுகமெல்லாம் எளிதில் கிட்டும்.

திருவிளக்கிடுவதற்குப் பசு நெய் மிகவும் உத்தமமானது. அது பெற இயலாதவர்கள் நல்லெண்ணெய், தேங்காய்நெய், இருப்பை நெய் முதலியனவற்ருல் திருவிளக்கிடலாம். திருவிளக்கு ஏற்றுவதற்கு நூலால் அமைந்த திரிகளே உத்தமமானவை. பருத்தி நூல், தாமரை நூல், வெள்ளெருக்கு நூல் இவைகளில் ஏதாகினும் ஒன்ருல் திரி சமைத்து இடுதல் சிறப்பானது.

தீபத்தை வெள்ளிக்கிழமை தோறும் தேய்த்துச் சுத்தமாக்கிக் குங்குமப் பொட்டிட்டுப் பின் விளக்கு ஏற்ற வேண்டும் மலர் கிடைத்தால் அம்மலரை விளக்கின் பாதத்தில் வைத்தல் வேண்டும். சரமாகத் தொடுத்தால் விளக்கின் மேற்பாகத்தில் அதனை அணிய வேண்டும். மலர் கருகக் கூடுமாகையால் விளக்கின் முடியில் வைத்தல் கூடாது. ஒரு திரியை மட்டும் ஏற்றுவதானுல் தீபஜோதி கிழக்கு முகமாகவே விளங்க வேண்டும் விரும்பின் ஐந்து முகத்திலும் ஜோதியை ஏற்றலாம். இடக்கையால் எந்தவித மங்கள காரியங்களும் செய்தல் ஆகாது. முடிவில் அன்புக் காணிக்கையாக ஒரு அரிசியைத் தீபத்தின் மேல் தட்டில் வைத்து எப்பொழுதும் என் உள்ளொளி பெருக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து திரியை உள்ளே இழுத்து ஒளியை நெய்யில் மறையச் செய்ய வேண்டும். கையால் வீசியும், வாயால் ஊதியும் அணைக்கக் கூடாது.

''திருவிளக்கிட்டாரைத் தெய்வம் அறியும்''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது இல்லமே ஓர் ஆலயம்

நாம் குடியிருக்கும் இல்லத்தையே ஓர் ஆலயமாகக் கொண்டு அதை அகமும், புறமும் பரிசுத்தமாக வைத்துக்கொண்டால் அதில் தேவியின் சாந்நித்யம் நிரந்தரமாக ஏற்படும். தேவியின் சாந்நித்யம் ஏற்பட்டுவிட்டது என்னும் பாவனையுடன் இல்லத்தை எப்பொழுதும் மங்களமாயும், பரிசுத்தமாகவும் வைத்துக் கொண்டு திருமெழுக்கிடுதல், கோலமிடுதல், காலை மாலை திருவிளக்கேற்றுதல், வேத ஒலியும், கீத ஒலியும் ஒலிக்கச்செய்தல் இவைகளால் நமது இல்லம் நிரந்தரமாகத் தெய்வ சாந்நித்யத்துடன் திகழும்படிச் செய்ய வேண்டுவது மிக்க அவசியம்.

நமது இல்லத்தில் உள்ள கிணறும் தீர்த்த மாதாவின் அம்சம். எனவே தினந்தோறும் அக்கிணற்றில் ஸ்நானஞ் செய்யும் போது பராசக்தியின் அம்சமான இத்தீர்த்தம் நமது உள்ளும், புறமும் சுத்தி செய்து நம்மைப் பாவனமாக்கட்டும் என்று பிரார்த்தித்துப் பிறகு ஸ்நானஞ் செய்தால் நல்ல பலனைத் தரும். "கங்கேச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி நர்மதா சிந்து காவேரி ஜலேஸ்மின் சந்நிதம் குரு" என்னும் ஸ்லோகத்தைக் கூறி கிணற்று தீரிலோ அல்லது குழாய் மற்றும் நீராடத்தக்க நீர் நிலைகளிலோ ஸ்நானஞ் செய்து தேவியின் க்ருபையை அடைவோமாக.

இந்நூலைத் தொகுத்து உதவியவர்:

திரு. சி. நவரத்தினம்,

இல. 1 , முகத்துவாரம் வீதி,

கொழும்பு-15. (இலங்கை)

2-11-75 (ஞாயிற்றுக்கிழமை—தீபாவளித் திருநாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# தீபாராதனை

1. உலகெலாம் அன்பு மேவி ஒருகுலமாக வாழ்க!
கலகமுந் துயரும் வீழ்க! கருணையும் களிப்பும் பொங்க,
நலமெலாம் விளைய, ஞான ஞாயிறு பொலிய நாளும்
இலகுவாய் சுத்த ஜோதி! இறைவனே போற்றி! போற்றி!!

2. ஒள்ளிய துரிய வானில் ஓங்கிடுஞ் சோதி வாழ்க!
தெள்ளிய ருள்ளோ அன்பாய்த் திகழ்பரஞ் சோதி வாழ்க!
உள்ளமே தில்லையாக ஓமொலி இசைய தாகத்
துள்ளிநன் னடனமாடும் தாயசிற் சோதி வாழ்க!

## தீப ஒளியில் தேவி

நமது தேசத்தில் திருவிளக்கைத் தேவியாகப் பூஜை செய்வது தொன்று தொட்டு உள்ள ஒரு வழக்கம். தீப ஒளியில் தேவியை வழிபட்டால் லக்ஷ்மிகடாக்ஷமும், நோயற்ற வாழ்வும், சர்வ மங்களங்களும் நமக்குச் சர்வ மங்களையான தேவி அளிப்பாள், எனவே பிரதி தினம் திருவிளக்கு ஏற்றுவதுடன், வெள்ளிக்கிழமைகளில் குத்து விளக்குகளை ஏற்றி ஸ்திரீகள் தனித்தோ, ஒன்று கூடியோ மலர்கள் தூவி, அம்பாளின் புகழ் பாடி இத்திரு விளக்கு பூஜையைச் செய்யலாம்.

"தீப தரிசனம் பாவ விமோசனம்"
"பொங்கும் மங்களம் எங்குந் தங்குக"

---

அன்பளிப்பு:

விஜயா கார்ப்பரேஷன்
(Vijaya Corporation)
(சிறந்த ரக ஜவுளிகளை நியாயமான விலையில் விற்பனை செய்யும் ஸ்தாபனம்)
243, பிரதான வீதி, கொழும்பு-11, (இலங்கை).
தொலைபேசி எண்: 359

---

அருளொளி அச்சகம், 31/21, டேசன் வீதி, கொழும்பு-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org